மாரியம்மன்

தாலாட்டு

திருவொற்றியூர் சென்னை

கலைமகள் பதிப்பு

இதன் விலை 1937 அணா 1

மாரியம்மன்

தாலாட்டு

ஆ. கன்னையநாயுடு அவர்களது
சாரதா நிலையம் அச்சுக்கூடம்
சென்னை.

விலை] 1936 [பை 6.

உ

பராசத்தி துணை

எத்தேசங்களிலும் இடைவிடாமற்

சிந்தித்துவரும்

மாரியம்மன் தாலாட்டு

விநாயகர் துதி

காப்பு

கொச்சகக்கலிப்பா

பூதலத்தில்யாவர்களும் போதரவாயென்னுளும்
மாதரசியென்று வாழ்த்துகின்றமாரியம்மன்
சீதரனார்தங்கைச் சிறப்பானதாலாட்டைக்
காதலுடனோதக் கணபதியுங்காப்பாமே.

வெண்செந்துறை

முந்திமுந்திவிநாயகரே முக்கணனார்தன்மகனே
கந்தருக்குமுன்பிறந்த கற்பகமேமுன்னடவாய்
வேலவர்க்குமுன்பிறந்த விநாயகரேமுன்னடவாய்

வேம்படியின்பிள்ளையாரே விக்கினரேமுன்னட வாய்
பேழைவயிற்ரோனே பெருச்சாளிவாகனரே
காரானமால்மருகா கற்பகமேமெய்ப்பொருளே
சீரான நல்மருகா செல்வக்கணபதியே
ஒற்றைக்கொம்போனே யுமையாள் திமருகனே
கற்றைச்சடையணிந்த கங்காதரன்மகனே
வித்தைக்குவி நாயகனே வெண்ணையுண்டோன்மருகா
மத்தக்கரிமுகவா மாயோன்மருகோனே
ஐந்துகரத்தோனே யானைமுகத்தோனே
தந்திமதவாரணனே தற்பரனேமுன்னடவாய்
நெஞ்சிற்குடியிருந்து நீயெனக்குமுன்னடவாய்
பஞ்சுயஞ்சுமெல்லடியாள் பார்வதியாள்புத்திரனே
வேழமுகத்தோனே விநாயகரேமுன்னடவாய்
தாழ்விலாச்சங்கரனார் சற்புத்திராவாருமையா
முன்னடக்கும்பிள்ளையார்க்குகண்ணடக்கம்பொன்னாலே
கண்ணடக்கம்பொன்னாலே காற்சிலம்புமுத்தாலே
முத்தாலேதண்டைகொஞ்ச முன்னடவாய்பிள்ளையாரே
செல்வக்கணபதியுன் சீர்பாதம்நான்மறவேன்

சரஸ்வதி துதி

தாயேசரஸ்வதியே சங்கரியேமுன்னடவாய்
என்தாயேகலைவாணி யேகவல்லி நாயகியே
வாணிசரஸ்வதியே வாக்கில்குடியிருந்து
என்னாவிற்குடியிருந்து நல்லோசைதாருமம்மா
கமலாசனத்தாளே காரடிபெற்றவளே
என்-குரலிற்குடியிருந்து கொஞ்சடிபெற்றவளே
என்னாவுதவராமல் நல்லோசைதாருமம்மா
மாரியம்மன்தன்கதையை மனமகிழ்ந்துநான்பாட
சரியாகயென்னாவில் தங்கிகுடியிருமம்மா
கன்னனூர்மாரிமுத்தே கைதொழுதுநான்பாட
பின்னமில்லாமல் பிறகிருந்துகாருமம்மா

மாரியம்மன் துதி

மாயிமகமாயி மணிமந்திரசேகரியே
ஆயிவுமையவளே ஆதிசிவன்தேவியரே
மாரித்தாய்வல்லவியே மகாராசிவாருமம்மா
மாயன்சகோதரியே மாரிமுத்தேவாருமம்மா
ஆயன்சகோதரியே ஆஸ்தானமாரிமுத்தே

தாயே சுந்தரியே சங்கரியே வாருமம்மா
திக்கெல்லாம்பேர்ற்று மெக்காலதேவியரே
எக்காலதேவியரே திக்கெல்லாம்நின்றசத்தி
கன்னபுரத்தாளே காரணசவுந்தரியே
காரணசவுந்தரியே நாரணனார்தங்கையம்மாள்
நாரணனார்தங்கையம்மாள் நலல்முத்துமாரியரே
நல்லமுத்துமாரியரே நாககன்னிதாயாரே
உன்–கரகம்பிறந்ததம்மா கன்னனூர்மேடையிலே
உன்–வேம்புபிறந்ததம்மா விஜயநகர்பட்டணமாம்
உன்–சூலம்பிறந்ததம்மா துலங்குமணிமண்டபத்தில்
உன்–அலகுபிறந்ததம்மா அயோத்திநகர்பட்டணமாம்
உன்–பிறம்புபிறந்ததம்மா பிச்சாண்டிசந்நிதியாம்
உன்–உடுக்கைபிறந்ததம்மா உருத்திராட்சபூமியிலே
உன்–பம்பைபிறந்ததம்மா பளிங்குமாமண்டபத்தில்
உன்–கருத்துபிறந்ததம்மா கஞ்சகிரியிந்திரபுரம்
உன்–மருளர்தழைக்கவம்மா வையகங்களீடேற [த்தே
உன்–குமாரவர்க்கந்தான்றழைக்க கொம்பனையேமாரிமு
உனக்கு–மூன்றுகரகமம்மா முத்தான நற்கரகம்

உனக்கு—மூன்றுகரகமம்மா மூத்தான நற்கரகம்
உனக்கு—ஐந்துகரகமம்மா அசைந்தாடும்பொற்கரகம்
உனக்கு—ஏழுகரகமம்மா எடுத்தாடும்பொற்கரம்
உனக்கு-பத்துகரமம்மா பதிந்தாடும்பொற்கரகம்
வேப்பிலையும்பொற்கரகம் வீதிவிளையாடிவர
ஆயிரங்கண் ணுடையாள் அலங்காரிவாருமம்மா
பதிஞயிரங்கண் ணுடையாள் பராசத்திவாருமம்மா[தாய்
துலுக்காணத்தெல்லையெல்லாம்குலுக்காடப்பெண்பிறந்
துலுக்காணத்தெல்லைவிட்டு துரந்தரியேவாருமம்மா
தாயேதுரந்தரியே சங்கரியேவாருமம்மா
மலையாளதேசமெல்லாம் விளையாடப்பெண்பிறந்தாய்
மலையாளதேசம்விட்டு வாருமம்மாயிந்தமுகம்
சமைத்தாய்சமையபுரம் சாதித்தாய்கன்னபுரம்
இருந்தாய்விலாடபுரம் இனியிருந்தாய்கன்னபுரம்
சமையபுரத்தாளே சாம்பிராணிவாசகியே
சமையபுரத்தெல்லைவிட்டு தாயாரேவாருமம்மா
கன்னபுரத்தாளே காரணசவுந்தரியே
கன்னபுரத்தெல்லைவிட்டு காரணியேவந்தமரும்

கடும்பாடியெல்லையெல்லாங்காவல்கொண்டமாரிமுத்தே
ஊத்துக்காட்டமர்ந்தவளே வுதிரபலிகொண்டவளே
படவேட்டமர்ந்தவளே பரசுராமனைப்பெற்றவளே
படவேட்டைவிட்டுமெள்ள பத்தினியேவாருமம்மா
பெரியபாளையத்தமர்ந்த பேச்சியெனுமாரியரே
பெரியபாளையத்தைவிட்டு பேரரசிவாருமம்மா
ஆரணிபெரியபாளையமாம் அதிலிருக்குமாற்றங்கரை
ஆற்றங்கரைமேடைவிட்டு ஆச்சியரேவாருமம்மா
வீராம்பட்டணமமர்ந்த வேதாந்தமாரிமுத்தே
கோலியனூரெல்லையிலே குதிகொண்டமாரியரே
அந்தரத்திற்றேரோட அருகேசெடிலசைய
உச்சியிற்றேரோட உயரச்செடிலசைய
மச்சியிற்றேரோட மகரச்செடிலசைய
பக்கங்கயிரோட பகரச்செடிலசைய
ஆண்டகுருதேசிகரை அறியாதமானிடரை
தூண்டிலிட்டாட்டிவைக்கத் தோன்றினாய் நீயொருத்தி
சத்தியாய் நீயமர்ந்தாய் தனிகுட்டிகாவுகொண்டாய்
எல்லையிலே நீயமர்ந்தாய் எருமைகிடாகாவுகொண்டாய்

உன்னைப்போல்தெய்வம் உலகத்தில்கண்டதில்லை
என்னைப்போல்பிள்ளைகள்தானெங்குமுண்டுவையகத்தில்
கோர்த்தமுத்துவடமசையகொங்கைரெண்டும்பாலொழுக
ஏற்றவர்க்குவரந்தருவாய் எக்கலாதேவியரே
எக்கலாதேவியரே திக்கெல்லாமாண்டவளே
திக்கெல்லாமாண்டவளே திகம்பரியேவாருமம்மா
முக்கோணசக்கரத்தில் முதன்மையாய்நின்றசத்தி
அக்கோணந்தன்னில்வந்து ஆச்சியரேவந்தமரும்
தாயேதுரந்தரியே சங்கரியேவாருமம்மா
மாயிமருளியரே மணிமந்திரசேகரியே
வல்லாண்மைக்காரியரே வழக்காடுமாரிமுத்தே
வல்லவரைக்கொன்றாய் வலியவரைமார்பிளந்தாய்
நீலிகபாலியம்மா நிறைந்ததிருச்சூலியரே
நாலுமூலையோமகுண்டம் நடுவேகனகசபை
கனகசபைவீற்றிருக்கும் காரணசவுந்தரியே
காரணசவுந்தரியே நாரணனார்தங்கையரே
நாரணனார்தங்கையரே நல்லமுத்துமாரியரே
நடலைச்சுடலையம்மா நடுச்சுடலைதில்லைவனம்

தில்லைவனத்தெல்லைவிட்டு திரும்புமம்மாயிந்தமுகம்
வார்ப்புச்சிலையாளே வச்சிரமணித்தேராளே
தூண்டித்துடைபெருமன் தூண்டிமுள்ளுகைபெருமன்
மண்டையிலேதைத்தமுள்ளு மார்புருகிப்போகுதம்மா
பக்கத்திற்றைத்தமுள்ளு பதைத்துத்துடிக்குதம்மா [மா
தொண்டையிலேதைத்தமுள்ளு தோளுருவிப்போகுதம்
கத்திபோல்வேப்பிலையைகதறவிட்டாய்லோகமெல்லாம்
ஈட்டிபோல்வேப்பிலையையினுயனுப்பிக்கொண்டவளே
பத்திரிக்குள்ளிருக்கும் பாவனையையாரறிவார்
வேப்பிலைக்குள்ளிருக்கும் வித்தைகளையாரறிவார்
செடிலோதுடைபெருமன் தூண்டிமுள்ளுகைபெருமன்
தூண்டிமுள்ளைத்தூக்கி துடுக்கடக்கும்மாரிமுத்தே
ஒற்றைச்செடிலாட ஊரனைத்தும்பொங்கலிட
இரட்டைச்செடிலாட யிரண்டணியும்பொங்கலிட
பக்கச்செடிலாட படைமன்னர்கொக்கரிக்க
பரமசிவன்வாசலிலே பாற்பசுவுகாவுகொண்டாய்
ஏமனிடவாசலிலே எருமைக்கிடாகாவுகொண்டாய்
எருமைக்கிடாகாவுகொண்டாய் எக்கலாதேவியரே

எக்கலாதேவியரே திக்கெல்லாமாண்டசத்தி
காசிவள நாட்டாளே கன்னியாகுமரியரே
காசிவள நாட்டைவிட்டு கட்டழகிவாருமம்மா
ஊசிவள நாடு உத்தியாகுமரிதேசம்
அரியாதான்பாடுகிறேன் அம்மைதிருக்கதையை
தெரியாதான்பாடுகிறேன் தேவிதிருக்கதையை
எட்டென்றுலிரண்டறியேன் ஏழையம்மாவுன்னடிமை
பத்தென்றுலொன்றறியேன் பாலனம்மாவுன்னடிமை
பாடவகையறியேன் பாட்டின்பயனறியேன்
வருத்தவகையறியேன் வர்ணிக்கப்பேரறியேன்
பேருமறியேனம்மா பெற்றவளேஎன்தாயே
குழந்தைவருந்துறதுன் கோயிலுக்குக்கேட்கிலேயோ
மைந்தன்வருந்துறதுன் மாளிகைக்குக்கேட்கிலேயோ
பாலன்வருந்துறது பார்வதியேகேட்கிலேயோ
கோயிற்கடுமையம்மா கொண்டாடும்பாலகண்டி
மாளிகையைவிட்டு மாதாவும்வாருமம்மா
சந்நிதியைவிட்டுத் தாயாரும்வாருமம்மா
அரண்மனையைவிட்டு ஆத்தாளேவாருமம்மா

கோயிலிற்கடுமையம்மா கொண்டாடும்பாலகண்டி
சந்நிதிமைந்தனம்மா சங்கரியேபெற்றவளே
வருந்தியழைக்கிறேனுன் வண்ணமுகங்காணாமல்
தேடியழைக்கிறேனே தேவிமுகங்காணாமல்
ஏழைகுழந்தையம்மா எடுத்தோர்க்குப்பாலகண்டி
பாலன்குழந்தையம்மா பார்த்தோர்க்குப்பாலகண்டி
மைந்தன்குழந்தையம்மா மகாராசிகாருமம்மா
கல்லோடியுன்மனது கரையிலையோஎள்ளளவும்
இரும்போடியுன்மனது இரக்கிலையோஎள்ளளவும்
கல்லுங்கரைந்திடுமுன் மனங்கரையாதென்னவிதம்
இரும்புமுருகிடுமுன் னிருதயமுருகாதென்னவிதம்
முன்செய்ததீவினையோ முற்காலகதுப்பயனோ
பெரியோர்கள் செய்ததீவினையோ பெற்றவளே சொல்லு
ஏதுமறியனம்மா ஈஸ்வரியேசொல்லுமம்மா [மம்மா
கடும்பாடியெல்லையிலே கட்டழகிவீற்றிருப்பாய்
கடும்பாடியெல்லைவிட்டு கட்டழகிவாருமம்மா
கரகத்தழகியரே கட்டழகிமாரிமுத்தே
கரகத்துமீதிருந்து கட்டழகிகொஞ்சுமம்மா

கும்பத்தழகியம்மா கோபாலன் தங்கையரே
கும்பத்துமீதிருந்து கொஞ்சுமம்மாபெற்றவளே
கொஞ்சுமம்மாபெக்றவளே குறைகளொன்றும்வாராமல்
உனக்கு—பட்டுபளபளென்ன பாடகக்கால்சேராட [ட
உனக்கு—முத்துமொளமொளென்னமோதிரக்கால்சேரா
உலகமெல்லாம்முத்தெடுக்க உள்ளபடிதான்வந்தாய்
தேசகமல்லாமுத்தெடுப்பாய் தேவிகன்னனூராளே
முத்தெடுத்துதான்புகுந்தாய் உத்தமியேமாரிமுத்தே
உனக்கு—ஈச்சங்குறக்கூடை யிருக்கட்டும்பொன்னாலே
உனக்கு—தாழங்குறக்கூடை தனிக்கட்டும்பொன்னாலே
குறக்கூடைமுத்தெடுத்து கொப்பனையே நீபுகுந்தாய்
கோயிலின்சந்தடியில் கூப்பிட்டால்கேளாதோ
அரண்மனைசந்தடியில் அழைத்தாலுங்கேளாதோ
மாளிகையின்சந்தடியில் மாதாவேகேட்கிலையோ
மக்களிடசந்தடியோ மருமக்கள்சந்தடியோ
பிள்ளைகளின்சந்தடியோ பேரன்மார்சந்தடியோ
அனந்தல்பெருமையோ ஆசாரச்சந்தடியோ
சந்தடியைநீக்கியம்மா தாயாருமிங்கேவர

கொல்லிமலையாண்டவனைக் குமரகுருபரனை
கார்த்தவராயனைத்தான் கட்டழகுதானழையும்
தொட்டியத்துச்சின்னானை துரைமகனைத்தானழையும்
மதுரைவீரப்பனையென் மாதாவேதானழையும்
பாவாடைராயனைத்தான் பத்தினியேதானழையும்
கருப்பண்ணசுவாமியையுங் கட்டழகிதானழையும்
சங்கிலிகருப்பனைத்தான் சடுதியிற்றானழையும்
முத்தாலுராவுத்தன் முனையுள்ளசேவகரை
பெரியபாளையத்தமர்ந்த போச்சியரேமாதாவே
பாளையக்காரியம்மா பழிகாரிமாரிமுத்தே
கன்னனூர்மாரிமுத்தே கலககலன[illegible]டனமிடும்
உன்னைப்பணிந்தவர்க்கு உற்றதுணை நீயிரம்மா
ஆதிபரமேஸ்வரியே அருகேதுணையிரம்மா
உன்னைப்போல்தெய்வத்தை வுலகத்தில்கண்டதில்லை
என்னைப்போல்மைந்த ரெங்குமுண்டுவையகத்தில்
உன்-மகிமையறிந்தவர்கள் மண்டலத்தில்யாருமில்லை
உன்-சேதியறிவாரோ தேசத்துமானிடர்கள்
சேதியறியாதுலகில் செத்தமனுகோடியுண்டு

உன்–மகிமையானறிந்து மண்டலத்தில்பாடவந்தேன்
உன்–மகிமையறியாதுலகில் மாண்டமனுகோடியுண்டு
தப்புபிழைவந்தாலும் சங்கரியே நீபொறுத்து
ஆறுதப்புநூறுபிழை அடியார்கள்செய்ததெல்லாம்
மனதுபொறுத்து மனமகிழ்ச்சியாகவேணும்
தேவிமனம்பொறுத்து தீர்க்கமுடன்ரக்ஷியம்மா
கொண்டுமனம்பொறுத்து கொம்பனையேகாருமம்மா
கார்க்கக்கடனுனக்கு காரணசவுந்தரியே
காரடிபெற்றவளே காலுதலைநோகாமல்
வேணுமென்றுகாரடி நீ வேப்பஞ்சிலையாளே
பக்கத்துணையிருந்து பாலகனைக்காருமம்மா
பொரிபோலெழும்பி நீ பூரித்து ஆலித்து
ஆலித்து நீயெழும்பி ஆத்தாளிறக்குமம்மா
சிரசினில்முத்தையம்மா தற்காத்து நீயிறக்கும்
முகத்தினில்முத்தைம்மா முன்னுதாய் நீயிறக்கும்
கழுத்தினில்முத்தையம்மா கட்டழகி நீயிறக்கும்
தோளினில்முத்தையம்மா துறந்தரியே நீயிறக்கும்
மார்பினில்முத்தையம்மா மாதாவே நீயிறக்கும்

வயிற்றினில்முத்தையம்மா மயேஸ்வரியே நீயிறக்கும்
துடையினில்முத்தையம்மா தேவியே நீயிறக்கும்
முழங்காலில்முத்தையம்மா மீனாக்ஷி நீயிறக்கும்
கணுக்காலில்முத்தையம்மா காமாக்ஷி நீயிறக்கும்
பாதத்தில்முத்தையம்மா பாரிலிறக்கிவிடும்
பூமியிலிறங்கிவிடும் பெற்றவளேகாருமம்மா
பெற்றவளே தாயே பேரரசிமாரிமுத்தே
உற்றதுணையிருந்து உகந்தரிமேமாரிமுத்து
உனைவிட பூமிதனில் உறுதிதுணைவேறுமுண்டோ
பக்கத்துணையிருந்து பாதுபாத்து ரக்ஷியம்மா
செக்கச்சிவந்தவளே செங்கண்ணன்தங்கையரே
மங்கையென்னுமாதரசி மகாராசிவாருமம்மா
திங்கள்வதனியரே தேவிகன்னனூராளே
எங்கள்குலதேவியரே ஈஸ்வரியேகண்பாரும்
மங்களவினோதி மாதாவேகண்பாரும்
ஏழைக்கிரங்காமல் இப்படியே நீயிருந்தால்
வாழ்வதுநானெக்காலம் வார்ப்புச்சிலையாளே
ஆயிமகமாயி ஆரணஞ்சொற்காரணியே

மாயிடகமாயி மணிமந்திரசேகரியே
இரங்கிரங்குந்தாயாரே யெங்களைக்காப்பாற்றுமம்மா
மாரித்தாய்வல்லவியே மகராசிகாருமம்மா
வீரணன்சோலையிலே ஆரணமதானசத்தி
நீதிமன்னர்வாசலிலே நேராய்க்கொலுவிருந்தாய்
கொலுவிருந்தசத்தியரே கோர்த்தமுத்து நீயிறக்கும்
கோர்த்தமுத்து நீயிறக்கும் கொம்பனையேமாரிமுத்தே
போட்டமுத்து நீயிறக்கும் பொய்யாதவாசகியே
பொய்யாதவாசகியே புண்ணியவதியீஸ்வரியே [ன்
செடிலோதுடை பெருமன்தூண்டிமுள்ளோகைபெரும
அடங்காதமானிடரை ஆட்டிவைக்குமாரிமுத்தே
துஷ்டர்கள்தெண்டனிட துடுக்கடுக்குமாரிமுத்தே
கண்டவர்கள்தெண்டனிடக் கலக்கமிடுமாரிமுத்தே
அண்டாதபேர்களைத்தா ஞணுவத்தைத்தானடக்கி
இராஜாக்களெல்லோரும் நலமாகத்தான்பணிய
மகுடமுடிமன்னர் மனோன்மணியைத்தான்பணிய
கிரீடமுடிதரித்த கீர்த்தியுள்ளராஜாக்கள்
மகுடமந்திரிகள்வந்து மன்னிதெண்டனிட்டுநிற்க

பட்டத்துரைகள் படைமுகத்துராஜாக்கள்
வெட்டிக்கெலித்துவரும் வேதாந்தவேதியர்கள்
துஷ்டர்களைத்தானடக்கும் சூலிகபாலியம்மா
அடங்காதமானிடரை யடிமைபலிகொண்டசத்தி
மிஞ்சிவரும்ராட்சதரை வெட்டிவிருதுண்டகண்ணே
தஞ்சமென்றமானிடரை தற்காக்கும்பராபரியே
அவரவர்தான்பணிய வாக்கினையைப்பெற்றவளே
சிவனுடனேவாதாடும் சித்தாந்தமாரிமுத்தே
அரனுடனேவாதாடும் ஆஸ்தானமாரிமுத்தே
பிர்மனுடன்வாதாடும் பெற்றவளேமாரிமுத்தே
விஷ்ணுவுடன்வாதாடும் வேதாந்தமாரிமுத்தே
எமனுடன்வாதாடும் எக்காலதேவியரே
தேவருடன்வாதாடும் தேவிகன்னனூராளே
கன்னபுரத்தாளே காரணசவுந்தரியே
காரணசவுந்தரியே கர்த்தனிடதேவியரே
நெருப்பம்மாவுன்சொரூபம் நிஷ்டூரக்காரியரே
அனலம்மாவுன்சொரூபம் ஆஸ்தானமாரிமுத்தே
தணலம்மாவுன்சொரூபம் தரிக்கமுடிபோகாது

அண்டாநெருப்பேயம்மா ஆதிபரமேஸ்வரியே
காத்தானைப்பெற்றவளே கட்டழகிமாரிமுத்தே
தொட்டியத்துசின்னானை தொழுதுவரடண்ணசத்தி
கருப்பனையுங்கூடவேதான் கண்டுபணியவைத்தாய்
பெண்ணரசிக்காகப் பிள்ளையைக்கழுவில்வைத்தாய்
ஆணழகிக்காக மைந்தனைக்கழுவில்வைத்தாய்
அடங்காதபிள்ளையென் ஆண்டவனைகழுவில்வைத்தாய்
துஷ்டனென்றுசொல்லி துடுக்கடக்கிகழுவில்வைத்தாய்
பாரினில்முத்தையம்மா பத்தினியேதாயாரே
வாரியெடுக்கவொரு வஞ்சியரையுண்டுபண்ணாய்
முத்தெடுக்குந்தாதி மோகனப்பெண்ணேயென்று
தாதியரைத்தானழைத்து தாயாரேமுத்தெடுப்பாய்
முத்தெடுத்துதான்புகுந்தாய் உத்தமியாள்மாரிமுத்தே
மாயிமகமாயி மணிமந்திரசேகரியே
ஆயிவுமையவளே ஆஸ்தானமாரிமுத்தே
பாரமுத்தை நீயிறக்கிப் பாலகனைகாருமம்மா
காரடிபெற்றவ்ளே காலுதலைநோகாமல்
சொற்கேளாபிள்ளையென்று தூண்டிக்கழுவில்வைத்தாய்

கழுதனக்குமோர்வார்க்க கட்டழகியுண்டுபெண்ணாய்
நல்லதங்காளையுண்டுபெண்ணாய் நற்கழுவுக்குமோர்வார்க்க
உரியில்தயிர்வார்க்க உத்தமியேயுண்டுபெண்ணாய்
உன்—மருமகளைகாத்தாப்போ லிவ்வடிமையைகாருமம்மா
எவ்வளவுநேரமம்மா யேரெடுத்துப்பாருமம்மா
கடுகளவுநேரமம்மா கண்பார்க்கவேணுமம்மா [மா
கடைக்கண்ணால் நீபார்த்தால் கடைத்தேறிபோவேனம்
பாரளந்தோன் தங்கையரே பாலகனைக்காருமம்மா
பேராசிமாரிமுத்தே பிள்ளையைக்காருமம்மா
மகமாயிமாரிமுத்தே மைந்தர்களைக்காருமம்மா
பெற்றவளேமாரிமுத்தே பிள்ளைகளைக்காருமம்மா
ஆணழகிமாரிமுத்தே அடிமைகளைக்காருமம்மா
பூணாரம்பூண்டசத்தி பிள்ளைகளைக்காருமம்மா
பாரமெடுக்கவம்மா பாலகனாலாகுமோதான்
பூணாந்தானெடுக்க பிள்ளையாலாகுமோதான்
வருத்தபடுத்தாதே மாதாவேகண்பாரும்
பாலன்படுந்துயரம் பாக்கியவதிபார்க்கிலையோ
மைந்தன்படுந்துயரம் மாதாவேபார்க்கிலையோ

குழந்தைபடுந்துயரம் கொம்பனையேபார்க்கிலையோ
சிற்றடிகள்படுந்துயரம் தேவியரேபார்க்கிலையோ
பூணாரமுத்திரையைப் பெற்றவளேதானிறக்கும்
ஆபரணமுத்திரையை ஆத்தாளிரக்குமம்மா
இரங்கிரங்குந்தாயாரே எங்களைக்காப்பாற்றுமம்மா
அடிமைதனைக்காப்பாற்றி யாணழகி நீயிறக்கும்
கும்பத்துமாரியம்மா கொலுவிலலங்காரியரே
கொலுவிலலங்காரியரே கோர்த்தமுத்து நீயிறக்கும்
கோர்த்தமுத்து நீயிறக்கும் கொம்பனையேமாறிமுத்து
மாரியென்றால்மழைபொழியும் தேவியென்றால்தேன்
சொரியும்,தேவியென்றால்தேன்சொரியும் திரிபுரசுந்தரி
யே,திரிபுரசுந்தரியே தேசத்துமாரியம்மா
பொன்னுமுத்துமாரியரே பூரணசவுந்தரியே
தாயாரேபெற்றவளே சத்தகன்னிசுந்தரியே
பேருமறியேனம்மா பெற்றவளேதாயாரே
குருடன்கைக்கோலனென்று கொம்பனையே நீயறிவாய்
கோலைப்பிடுங்கிக்கொண்டால் குருடன்பிழைப்பானோ
இப்படிக்குநீயிருந்தாலினிபிழையோந்தாயாரே

கலிபிறக்குமுன்பிறந்த கனத்ததோர்மாரிமுத்தே
யுகம்பிறக்குமுன்பிறந்த உத்தண்டமாரிமுத்தே
கலியுகத்தில்தாயே கண்கண்டதெய்வம்நீ
உன்னைப்போல்தெய்வம் உலகத்தில்கண்டதில்லை
என்னைப்போல்மைந்தர்தா னெங்குமுண்டுவையகத்தில்
அனலைமதியாய்நீ யாவரையுஞ்சட்டைபண்ணாய்
புனலைமதியாய்நீ பூலோகஞ்சட்டைபண்ணாய்
வருந்தியழைக்கிறேனுன் திருமுகத்தைக்காணாமல்
பாலனைக்காத்து. பாதத்தாலுதைத்துவிடு
மைந்தனைக்காத்து மகராசிவுதைத்துவிடு
குழந்தையைக்காத்து கொம்பனையேயுத்தைத்துவிடு
ஆதிபரஞ்சோதி அங்குகண்ணே வாருமம்மா
வெள்ளிக்கிழமையிலே கொள்ளிக்கண் மாரியரே
வெள்ளியிலுந்திங்களிலும் வேண்டியபேர்பூசைசெய்ய
பூசைமுகத்திற்குப் போனேனென்றுசொல்லதே
இந்தமனையிடத்தி லீஸ்வரியேவந்தருள்வாய்
வந்தமனைவாழுமம்மா யிருந்தமனையீடேறும்
இருந்தமனையீடேற ஈஸ்வரியேவந்தருள்செய்

கண்பாரும் கண்பாரும் கனகவல்லி தாயாரே
நண்பான பிள்ளைகளை நலிந்திடச்செய்யாதே
உன்னை நம்பினோரை வோய்ந்துவிடச்செய்யாதே
அந்நீதஞ்செய்யாதே ஆயிமகமாயி
வேம்புரதமேறி வித்தகியேவாருமம்மா
பச்சிலைரதமேறி பார்வதியேவாருமம்மா
கொலுவிலிருந்தசத்தி கோர்த்தமுத்தை நீயிறக்கும்
போட்டமுத்தை நீயிறக்கும் பூலோகமாரிமுத்தே
கேளிக்கையாகக் கிளிமொழியேமுத்திறக்கும்
அரும்பாலகன்றன்னை அவஸ்தைப்படுத்தாதே
வருத்தப்படுத்தாதே மாதாவேகண்பாரும்
அன்னமிறங்கவம்மா ஆத்தாளேகண்பாரும்
ஊட்டத்தை நீகொடுத்து வுத்தமியேகாருமம்மா
இரக்கங்கொடுத்து நீ ஈஸ்வரியேகாருமம்மா
காருமம்மாபெற்றவளே காலுதலைநோகாமல்
எங்கையோபராமுகமா யிருந்தேனென்றுசொல்லாதே
அந்திசந்திபூசையிலே அசைதியாயெண்ணாதே
ஓட்டாரம்பண்ணாதே ஓங்காரிமாரிமுத்தே

பாவாடம்நேருமம்மா பழிகள்வந்துசேருமம்மா
பாவாடம்நேர்ந்ததென்றால் பாருலகுக்கேறாது
கண்டார்நகைப்பார்கள் கலியுகத்தாரேசுவார்கள்
கலியுகத்தாரேசுவார்கள் கட்டழகிமாரிமுத்தே
பார்த்தார்நகைப்பார்கள் பரியாசம்பண்ணுவார்கள்
உதடுபடைத்தவர்கள் வுதாசினஞ்சொல்லுவார்கள்
பல்லைபடைத்தவர்கள் பரியாசம்பண்ணுவார்கள்
நாவைப்படைத்தவர்கள் நாணயங்கள்பேசுவார்கள்
பார்த்தார்நகைக்கவம்மா பரியாசம்பண்ணாதே
கச்சிப்பதியாளே காமாட்சித்தாயாரே
தாயாரேபெற்றவளே தயவுவைத்துக்காருமம்மா
மாதாவேபெற்றவளே மனம்பொறுத்துக்காருமம்மா
பார்வதியேபெற்றவளே பக்ஷம்வைத்துக்காருமம்மா
ஆயிரங்கண்ணுடைய அலங்காரிவாருமம்மா
பதினாயிரமுத்தினிலே பார்த்தெடுத்தவாணிமுத்து
நூறாயிரமுத்தினிலே நூற்றெடுத்தவாணிமுத்து
ஆயிரங்கண்முத்துதனி[illegible]த்தாள்வளர்ந்தெழுந்தாள்
நாகத்தின்கண்ணேயம்மா நல்லவிடைப்பாம்பே

சேஷத்தின்கண்ணேயம்மா சின்னவிடைப்பாம்பே
அஞ்சுதலை நாகமுனக் கொஞ்சிவிளையாடுதம்மா
பத்துதலை நாகமம்மா பதிந்துவிளையாடுதம்மா
செந்தலை நாகமம்மா சேர்ந்துவிளையாடுதம்மா
கருந்தலை நாகமம்மா காக்குதம்மாவுன்கொலுவில்
சேஷனென்றபாம்பையெல்லாம் சேரவேபூண்டசத்தி
நாகமென்றபாம்பையெல்லாம் நலமாகபூண்டசத்தி
அரவமென்றபாம்பையெல்லாம் மழகாகபூண்டசத்தி
ஆபரணமாய்ப்பூண்டாய் அழகுள்ளபாம்பையெல்லாம்
நாகங்குடைபிடிக்க நல்லபாம்புதாலாட்ட
பூணாரமாய்ப்பூண்டாயுன் பொன்னுதிருமேனியெல்லா[ம்
தாலாட்டத்தாலாட்ட தாயார்மனமிரங்க
சேஷன்குடைகவிழச் செந்நாகம்வட்டமிட
வட்டமிட்டுவீற்றிருந்தாய் மாரிகன்னனூராளே
மார்மேலே நாகமம்மா மடிமேல்புரண்டாட
தோள்மேலே நாகமம்மா துடைமேற்புரண்டாட
மார்மேலுந்தோள்மேலும் வண்ணமடிமேலும்
கொஞ்சிவிளையாடுதம்மா கோபாலன்தங்கையரே

ஏழையாலாகுமோதான் ஈஸ்வரியைத்தோத்தரிக்க
குழந்தையாலாகுமோதான் கொம்பனையைத்தோத்தரிக்
அடியேனாலாகுமோதான் ஆத்தாளைத்தோத்தரிக்க [க
எந்தனாலாகுமோதான் ஈஸ்வரியைத்தோத்தரிக்க
இல்லையென்பாரபங்கில் ஈஸ்வரிமாரிமுத்தே
நில்லாயரைநாழி நிஷ்டூரத்தாண்டவியே
உண்டென்பார்பங்கில் ஒளிவிளக்காய் நின்றசத்தி
பார்த்தோர்க்குசெல்வனம்மா பாலன்குழந்தையம்மா
உன்னைபகைத்தோர்க்கு உருமால்பிலாணியம்மா
நினைத்தோர்க்கு தெய்வமம்மா எதிர்த்தார்க்கு மார்பிலா
தாயே நீவாருமம்மா தற்பறையா நின்றசத்தி [ணி
வாக்கிட்டால்தப்பாது வரங்கொடுத்தால்பொய்யாது
பொய்யாதுபொய்யாது பூமலர்தான்பொய்யாது
பூவிரண்டுபூத்தாலும் நாவிரண்டுபூர்க்காது
மறவரிடவாசலிலே மல்லிகைப்பூபூத்தாலும்
மறவரறிவாரோ மல்லிகைப்பூவாசனையை
குறவரிடவாசலிலே குடமல்லிபூத்தாலும்
குறவரறிவாரோ குடமல்லிவாசனையை

பன்றிமுதுகினில் பன்னீரைபூசினுக்கால்
பன்றியறியுமோதான் பன்னீரின் வாசனையை
என்னாலேயாகுமோதான் ஈஸ்வரியைத்தோத்தரிக்க
மைந்தனாலாகுமோதான் மாதாவை நமஸ்கரிக்க
பிள்ளையாலாகுமோதான் பெற்றவளை நமஸ்கரிக்க
பாலனாலாகுமோதான் பார்வதியை நமஸ்கரிக்க
எச்சிலொருகோடி இளந்தீட்டுமுக்கோடி
தீட்டுவொருகோடி தெருவெங்குந்தானுமுண்டு
கன்னிகள் தீட்டு கலந்தோடிவந்தாலும்
ஆறுதப்புநூறுபிழை அடியார்கள் செய்தாலும்
தாயேமனம்பொறுத்து தயவாகக்காருமம்மா
எச்சிற்கலந்ததென்று இடையப்போய் நிற்காதே
தீட்டுக்கலந்தாலும் தேவிமனம்பொறுத்து
எச்சிற்கலந்தாலும் ஈஸ்வரியேமனம்பொறுத்து
பக்ஷம்வைத்துக்காருமம்மா பராபரியே அங்குகண்ணு
விருப்பம்வைத்துகாருமம்மா விருதுபடைத்தசக்தி
நீலிகபாலியம்மா நிறைந்தபஞ்சாட்சரியே
சூலிகபாலியம்மா சுந்தரியேமாரிமுத்தே

நிஷ்டூரகாரியரே விஸ்தாரமுள்ளசத்தி
வேப்பிலையால்தான்தடவி விசிறிமுத்தழுத்திவிடு
ஆனபராசத்தியரே யம்மைமுத்தழித்துவிடு
இரங்கிரங்குந்தாயாரே ஈஸ்வரியே நான்பிழைக்க
படவேட்டையமர்ந்தவளே பரசுராமனைபெற்றவளே
ஊத்துக்காட்டமர்ந்தவளே உதிரபலிகொண்டவளே
வீராம்பட்டணமமர்ந்த வேதாந்தமாரிமுத்தே
சமைந்தாய்சமையபுரம் சாதித்தாய்கன்னபுரம்
கன்னபுரத்தெல்லையெல்லாம் காவல்கொண்டமாரியரே
எக்காலதேவியரே ஈஸ்வரியேயிரங்குமம்மா
திக்கெல்லாம்பேர்படைத்த தேசத்துமாரியரே
அண்டபுவனமெல்லாந் துண்டரீகமுண்டசத்தி
கச்சிப்பதியாளே காமாட்சிதாயாரே
கைலாசலோகமெல்லாம் காவல்கட்டியாண்டவளே
பாதாளலோகமெல்லாம் பரதவிக்கப்பண்ணசத்தி
காலைக்கொலுவிலம்மாகாத்திருந்தாராயிரம்பேர்
உச்சிக்கொலுவிலம்மா வுகந்திருந்தாராயிரம்பேர்
அந்திக்கொலுவிலம்மா அமர்ந்திருந்தாராயிரம்பேர்

கட்டியக்காரரெல்லாம் கலந்தெச்சரிக்கைபண்ண
பாடும்புலவரெல்லாம் பண்பிசைந்தபாடல்சொல்ல
வடுகர்துலுக்கரோடு மருட்டியர்கன்னடியர்
கன்னடியர்காவலுடன் கர்னூட்டுப்பட்டாணியர்
இட்டசட்டைவாங்காத இடும்பரெல்லாங்காத்திருக்க
போட்டசட்டைவாங்காத பொந்திலியர்காத்திருக்க
வடுகர்துலுக்கரம்மா மறுதேசபட்டாணியர்
வேடிக்கைப்பார்த்திருந்தாள் வேப்பஞ்சிலையாளும்
கேளிக்கைப்பார்த்திருந்தாள் கிளிமொழியாள்மாரிமுத்து
மாயமெல்லாம்முன்மாயம் மருளரெல்லாமுன்மருளர்
மருளர்தழைக்கவம்மா மருமக்களீடேற
பலிசட்டிதானெடுக்கும் புத்திரர்கள்தான்றழைக்க
வேதங்கள்தான்தழைக்க விண்ணவர்களீடேற
குமாரவர்க்கந்தான்தழைத்க மாதாவேகண்பாரு
மைந்தர்கள்தான்தழைக்க மாதாவேகண்பாரு
காஞ்சிபுரியிலேதான் கர்த்தரையும்நீ நினைத்து
கர்த்தரையும்நீ நினைத்து காமாட்சிபூசைபண்ணாய்
கங்கைமுழுகியம்மா கிளிமொழியேதவமிருந்தாய்

வைகைமுழுகியம்மா வனமயிலேதவமிருந்தாய்
பொய்கைமுழுகியம்மா பெற்றவளேதவமிருந்தாய்
தவத்திலிருந்தவளே சத்தகன்னிதாயாரே
ஆற்றுமணலெடுத்து அரணுரையுண்டுபண்ணுய்
சேற்றுமணலெடுத்து அரணுரையுண்டுபண்ணுய்
கம்பைநதியிலே காமாட்சிதவமிருந்தாய்
இருநூற்றுகாதவழி திருநீற்றுல்கோட்டையிட்டாய்
திருநீற்றுல்கோட்டையிட்டாய்திகம்பரியேமாரிமுத்தே
அருணுசலந்தனிலே ஈசான்யமூலையிலே
திருவண்ணுமலையிலேதான் தேவிதவமிருந்தாய்
அருணுசலந்தனிலே ஆத்தாள்தவமிருந்தாய்
ஈசான்யமூலையிலே இருந்தாய்பெருந்தவசு
இருந்தாய்பெருந்தவசு இடப்பாகம்பேறுபெற்றுய்
இடப்பாகம்பேருபெற்ற ஈஸ்வரியேமாதவே
காகமுதுகினிற் கதம்பப்பொடிபூசிவைத்தால்
காகமறியுமோதான் கதம்பப்பொடிவாசனையை
கொக்குமுதுகினில் கோமேதகங்கட்டிவைத்தால்
கொக்குமறியுமோதான் கோமேதகத்தினொளியை

மூலக்கனலின் முதன்மையா நின்றசத்தி
பாலனுக்குவந்த பாரயெரிச்சல்களில்
காலெரிவுகையெரிவு கட்டழகிவாங்குமம்மா
குத்தல்குடைச்சல் சூலைமாரிடிநோவு
மண்டைக்குடைச்சலோடு மாரடைம்புதலைநோவு
வாதபித்தம்சீதசுரம் வல்பிணியைக்காருமம்மா
இடுப்புகுடைச்சலைத்தா னீஸ்வரியேவாங்குமம்மா
பித்தயெரிவுகளைப் பெற்றவளேவாங்குமம்மா
கழுத்துவலிதனைக் கட்டழகிவாங்குமம்மா
பத்திரியால்தானறடவி பாரமுத்தழித்துவிடு
விபூதியைப்போட்டு இறக்கிவிடுமுத்திரையை
வேப்பிலைபட்டாவிடம் வினைகள்பறந்தோடுமம்மா
பத்திரிபட்டவிடம் பாவம்பறந்தோடுமம்மா
விபூதிபட்டதக்ஷணமே வினைகள்பறந்தோடுமம்மா
பஞ்சாக்ஷரம்பட்டால் பாவங்கள்பறந்தோடுமம்மா
பத்தென்றுலிரண்டறியேன் பாலனம்மாஉன்னடிமை
எட்டென்றுலிரண்டறியேன் ஏழையம்மாஉன்னடிமை
நாகத்தின்கண்ணேயம்மா நல்லவிடைப்பாம்பே

சேஷத்தின்கண்ணேயம்மா சின்னவிடைப்பாம்பே
பாம்பேதலைக்கணைதான் வேப்பிலையோபஞ்சுமெத்தை
வேப்பம்பாலுண்டவளே வேதாந்தமாரிமுத்தே
ஐந்நூறுபாம்புனுக்கு அள்ளியிட்டவீரசடை
வீரசடைமேலிருந்து மெல்லியரேகொஞ்சுமம்மா
முந்நூறுசந்தி முதற்சந்தியுன்னுதென்றாய்
நானூறுசந்தி நடுச்சந்தியுன்னுதென்றாய்
சந்திக்குச்சந்தி தனிச்சந்தியுன்னுதென்றாய்
வீதிக்குவீதி வெளிச்சந்தியுன்னுதென்றாய்
பட்டத்தழகியம்மா படைமுகத்துராஜகன்னி
கன்னபுரத்தாளே காரணசவுந்தரியே
திருவிளக்குநாயகியே தேவிகன்னனூராளே
மணிவிளக்கின்மேலிருந்து மாதாவேகொஞ்சுமம்மா
விளக்கிற்குடியிருந்து மெல்லியரேகொஞ்சுமம்மா
திருவிளக்கின்மேலிருந்து தேவியரேகொஞ்சுமம்மா
கொஞ்மம்மாபெற்றவளே கோபாலன்தங்கையரே
சிரித்தார்முகத்தையம்மா செல்லரிக்கக்கண்டிடுவாய்
பரியாசஞ்செய்தவரைப் பல்லைப்பிடுங்கிவைப்பாய்

மூலவீட்டுப்பெண்களைத்தான் முற்றத்திலாட்டிடுவாய்
அரண்மனைப்பெண்களைத்தா னம்பலத்திலாட்டிடுவாய்
பார்ப்பாரப்பெண்களைத்தான் தோற்பாதங்கட்டிடுவாய்
தோற்பாதங்கட்டிடுவாய் துரந்தரியேமாதாவே
நடுவீதியிற்கொள்ளிவைத்து நானறியேனென்றிடுவாய்
கடைவீதியிற்கொள்ளிவைத்து கடக்கபோய் நின்றிடுவா[ய்]
கடியாவிஷம்போலே கடிக்கவிட்டுபார்த்திருப்பாய்
தீண்டாவிஷம்போலே தீண்டவிட்டுபார்த்திருப்பாய்
பாம்புகண்ணி நீலியம்மா பழிகாரிமாரிமுத்தே
தாயேதுரந்தரியே சர்வலோகமாதாவே
ஆருதகோபமெல்லா மாச்சியரேவிட்டுவிடு
கடலில்முழுகியம்மா கடுகநீவாருமம்மா
காவேரியில்தான்முழுகி காமாட்க்ஷிவாருமிங்கே
வந்தமனைவாழுமம்மா இருந்தமனையீடேறும்
கஞ்சாவெறியன் கனவெறியன்பாவாண்டை
பாவாடைராயனைத்தான் பத்தினியேதானழையும்
தாயாரும்பிள்ளையுமாய் தற்கார்க்கவேணுமம்மா
மாதாவும்பிள்ளையுமாய் மனதுவைத்துக்காருமம்மா

ஆத்தாளும்பிள்ளையுமாய் அன்புவைத்துக்காருமம்மா
காரடிபெற்றவளே காலுதலைநோகாமல்
காசிவள நாட்டைவிட்டு காரணியேவந்தமரும்
ஊசிவள நாட்டைவிட்டு உத்தமியேவந்தருளும்
பம்பைமுழங்கிவர பரமேளமார்ப்பரிக்க
சிற்றுடுக்கைகொஞ்சிவர சிறுமணிகளோலமிட
வேடிக்கைபார்த்திருந்தாள் வேப்பஞ்சிலையாளும்
கேளிக்கைபார்த்திருந்தாள் கிளிமொழியாள்மாரிமுத்து
சமயபுரத்தாளே சாம்பிராணிவாசகியே
முக்கோணத்துள்ளிருக்கும் முதன்மையாய்நின்றசத்தி
நாற்கோணத்துள்ளிருக்கும் நல்லமுத்துமாரியரே
பஞ்சாக்ஷரப்பொருளே பார்வதியேபெற்றவளே
அறுகோணத்துள்ளிருக்கும் ஆதிபரமேஸ்வரியே
அஷ்டாக்ஷரப்பொருளே ஆனந்தமாரிமுத்தே
நாயகியேமாரிமுத்தே நாரணனார்தங்கையரே
ஐம்பத்தோரக்ஷரியே ஆதிசிவன்தேவியரே
ஆதிசிவன்தேவியரே அம்மைமுத்துமாரியரே
பேருலகரக்ஷகப் பெருமாளுடன்பிறப்பே

பெருமாளுடன்பிறந்து பேருலகையாண்டவளே
ஆயனுடன்பிறந்து அம்மை முத்தாய் நின்றவளே
திரிகோணத்துள்ளிருக்கும் திரிபுரசவுந்தரியே
ஆருதாரப்பொருளே அபிஷேகப்பத்தினியே
மூலாதாரப்பொருளே முன்பிறந்ததேவதையே
தாயேதுரந்தரியே சர்வலோகேஸ்வரியே
பத்திரியால்தான் தடவிப் பாரமுத்தைதானிறக்கும்
வேப்பிலையால்தான் தடவி மெல்லியரேதானிறக்கும்
மேனியெல்லாந்தான்குளிர விளையாடிமுத்திறக்கும்
இரங்கிறங்குந்தாயாரே எங்களைகாப்பாற்றுமம்மா
முத்திலுமுத்து முகத்திலிடுமாணிமுத்து
எங்கும்நிறைந்த எல்லார்க்கும்மாரிமுத்து
பெண்ணாய்ப்பிறந்து பேருலகையாளவந்தாய்
பேருலகையாளவந்த பெண்ணரசிமாரிமுத்தே
நித்தம்பராமரிக்க நிஷ்டூரி நீபிறந்தாய்
தேசப்பராமரிக்க தெய்வகன்னி நீபிறந்தாய்
கிளியேந்தும்நாயகியே கிளிமொழியேதாயாரே
நித்தியக்கல்யாணி நீலிபரஞ்சோதி

அம்மணிபார்வதியே ஆணிமுத்துதாயாரே
லோகமெல்லாமுத்தளக்கும் லோகபரமேஸ்வரியே
வெற்றிக்கொடிபறக்க விருதுபம்பைதான்முழங்க
எக்காளமூதிவர எங்குங்கிடுகிடென்ன
பஞ்சவர்னடால்விருது பக்கமெல்லாஞ்சூழ்ந்துவர
நாகசுரவேளம் நாட்டியங்களாடிவர
தப்பட்டைமேளம் தவின்முரசுதான்முழங்க
காளங்களூதிவர கவிவாணரெச்சரிக்க
சின்னங்களூதிவரச் சிறப்பாய்க்கொடிபிடிக்க
ஜண்டாசிலர்பிடிக்கத் தனிமுரசுதானடிக்க
கொடிகள்சிலர்பிடிக்கக் கொக்கரிப்பார்வீரமக்கள்
தாமரைகள்தான்வீசச் சந்திப்பார்வீரமக்கள்
தாரைபூரிசின்னம் ஆரபாரமாய்முழங்க
தக்கையுடுக்கைகளும் தவிலோடுபம்பைகளும்
மிக்கதவுண்டைகளும் மிருதங்கந்தான்முழங்க
நன்குமதியுஞ்சுதியும் நன்றாகவூதிவர
தம்புருவீணை தக்கபடிவாசிக்க
பம்பையடித்துவரப் பரமேளந்தானதிர

கெண்செட்டுவாத்தியமும் கிளார்நெட்டுவாத்தியமும்
கொடிவாத்தியமும்புதிதாய் கொண்டுவந்தாருன்மக்கள்
இத்தனைவாத்தியங்கள் இசைக்கின்றார்பாருமம்மா
பார்த்துக்குளிருமம்மா பாங்கானவுன்மனது
கண்டுகுளிருமம்மா கல்லானவுன்மனது
எப்படியாகிலுந்தா னேழைகளுமீடேற
கண்பாருமம்மா காரணசவுந்தரியே
இந்திரனுக்கொப்பா யிலங்குமகமாரியரே
கும்பத்தழகியம்மா கொலுமுகத்துராஜகன்னி
சகலகுற்றம்சகலபிழை தாயாரே நீபொறுப்பாய்
வணங்குகின்றமக்களுக்கு வாழ்வுமிகவளிப்பாய்
ஓங்காரரூபியென்று உன்னையேதோத்தரிக்க
படவேட்டில்வீற்றிருக்கும் பரஞ்சோதிதாயாரே
ஆரறிவாருன்மகிமை ஆணிமுத்துதாயாரே
அண்டபுவனமெல்லாம் அம்மாவுனைத்தொழுவார்
தேசங்களெங்குந் தேவியைத்தோத்தரிப்பார்
எள்ளுக்குளெண்ணெய்போ லெங்குநிறைந்தசத்தி
எங்கும்நிறைந்தவளே எல்லோர்க்குத்தாயாரே

அசரூமிலென்றவஸ்தமொடு அடியார்தமைக்காக்க
வேட்பிலையுங்கையில் விபூதியெங்குத்தூளிதமும்
கருணைகடாக்ஷம்வைத்துக் காக்குமகமாயிவுந்தன்
சரணாரவிந்தமதைத் தந்தருளுமாரிமுத்தே
உன்பேர் நினைத்தால்பில்லி பிசாசுபரந்தோடுமம்மா
சூனியமும்வைப்பும் சுழன்றலைந்தோடிவிடும்
பாதாளவஞ்சனமும் பறந்துவிடுமுன்பேர் நினைத்தால்
கரகத்தில்வீற்றிருக்குட் கன்னனூர்மாரிமுத்தே
சத்தகன்னிமாதாவே சங்கரிமனோன்மணியே
சூலங்கபாலமுடன் துய்யடமரகமும்
ஓங்காரரூபமம்மா ஒருவரறிவாரோ
மகிமையறிவாரோ மானிடர்கள்யாவருந்தான்
அடியார்தமைக்காக்கும் மந்திரிநிரந்தரியே
அடியார்கள்செய்தபிழை ஆச்சியரே நீபொறுப்பாய்
கோயிலடிமையம்மா கொண்டாடும்பாலகன்றன்
சன்னதிபிள்ளையைத்தான் தற்காரும்பெற்றவளே
உன்னையல்லால்வேறு துணைஒருவரையுங்காணேனம்மா
வருந்துவார்பங்கில் வளமாய்குடியிருப்பாய்

பாவாடைக்காரி பர்பரியே அங்குகண்ணே
உண்ணுகின்றதேவதைக ளெடுத்துகின்றதேவதைகள்
கட்டுபட்டதேவதைகள் கார்க்கின்றதேவதைகள்
இந்தமனையிடத்தி லிருந்துண்ணும்தேவதைகள்
சாம்பிராணிதூபத்திற்கு குட்பட்டதேவகைள்
அனைவோரும்வந்திந்து அடியாரைக்காக்கவேணும்
ஓமுபடித்தளமாம் ஓலைப்பூமண்டபமாம்
ஓலைப்பூமண்டபத்தில் உகந்துகொலுவிருந்தாள்
இரண்டாம்படித்தளமாம் இரத்தினசிம்மாதனமாம்
இரத்தினசிம்மாசனத்தி லிருந்தரசுதான்புரிவாள்
மூன்றாம்படித்தளமாம் முனைமுகப்பூச்சாலைகளாம்
முனைமுகப்பூச்சாலைகளில் முந்திக்கொலுவிருந்தாள்
நான்காம்படுத்தளமாம் நவரத்னமண்டபமாம்
நவரத்தினமண்டபத்தில் நாயகியும்வந்தமர்ந்தாள்
ஐந்தாம்படித்தள்மாம் அழுந்தியசிம்மாதனமாம்
அழுந்தியசிம்மாதனத்தி லாயிகொலுவிருந்தாய்
ஆறாம்படித்தளமாம் அலங்காரச்சாவடியாம்
அலங்காரச்சாவடியில் ஆச்சியரும்வந்திருந்தாள்

ஏழாம்படித்தளமாம் எழுதியசிம்மாதனமாம்
எழுதியசிம்மாதனத்தி லீஸ்வரியாள்கொலுவிருந்தாள்
எட்டாம்படித்தளமாம் விஸ்தாரமேடைகளாம்
விஸ்தாரமேடையதில் விமலியரும்வந்தமர்ந்தாள்
ஒன்பதாம்படித்தளமாம் ஒருமுகமாய்நின்றசத்தி
ஒருமுகமாய்நின்றசத்தி உத்தமியுங்கொலுவிருந்தாள்
பத்தாம்படித்தளமாம் பளிங்குமாமண்டபமாம்
பளிங்குமாமண்டபத்தில் பத்தினியாள்கொலுவிருந்தா [ள்
ஆத்தாள்கொலுவிலேதா னூற்கொலுவிருந்தார்
ஐங்கரனும்வல்லபையும் அன்பாய்கொலுவிருந்தார்
தொந்திவயிற்றோனும் துந்துபியுங்கொலுவிருந்தார்
குழந்தைவடிவேலன் குமரேசர்தானிருந்தார்
தோகைமயிலேறும் சுப்பிரமணியர்கொலுவிருந்தார்
சிங்கவாகனமேறுந் தேவிகொலுவிருந்தாள்
ஊர்க்கார்க்குங்காளி உத்தமியாள்கொலுவிருந்தாள்
துர்க்கையொடுகாளி தொடர்ந்துகொலுவிருந்தாள்
வள்ளிதெய்வானையுடன் மகிழ்ந்துகொலுவிருந்தாள்
பச்சைமலைநாயகியாள் பைங்கிளியாள்தானிருந்தாள்

பூவைக்குறத்தியரும் பொருந்திக்கொலுவிருந்தாள்
வாழ்முனியும்செம்முனியும் வ்ந்துகொலுவிருந்தார்
காத்தான்கறுப்பனொடு கட்டழகர்வீற்றிருந்தார்
தொட்டியத்துச்சின்னானும் துரைமகனுந்தாமிருந்தார்
மருமக்களெல்லோரும் மகிழ்ந்துகொலுவிருந்தார்
குமாரர்களெல்லோரும் கூடிக்கொலுவிருந்தார்
ஆரியமாலையுட னனைவோரும்வீற்றிருந்தார்
ஆயரின்பெருமா ளனந்தசயனனென்னும்
மாயன்பெருமாள் மங்கைமணவாளன்
ஐவரையுங்காத்த ஆதிநெடுமாலும்
பஞ்சவரைக்காத்த பாரளந்தோன்தாமிருந்தார்
கொற்றவரைக்காத்த கோபாலர்தாமிருந்தார்
முட்டையிற்குஞ்சு மூகமறியாலகரை
பிட்டுவளர்த்தெடுத்த பெருமாள்கொலுவிருந்தார்
செட்டையிற்காத்த ஜெயராமர்சீதையரும்
அலமேலுமங்கையம்மா ளிராமர்சீதையரும்
மங்கையொடுலட்சுமியு மகிழ்ந்துகொலுவிருந்தாள்
சீதேவிமூதேவி சேர்ந்துகொலுவிருந்தாள்

பாஞ்சாலனெக்கியத்தில் பதுமைபோல்வந்துதித்த
பத்தினியாள் துரோபதையும் பாரக்கொலுவிருந்தாள்
தளராதனஞ்செயரும் தருமர்கொலுவிருந்தார்
வாயுதேவன்புத்திரனார் மதவீமன்தாமிருந்தார்
தேவேந்திரன்புத்திரனார் தேர்விஜயன்தாமிருந்தார்
நகுலசகாதேவர் நலமாய்க்கொலுவிருந்தார்
கானக்குயிலழகர் கட்டழகர்வீற்றிருந்தார்
ஐவர்களுங்கூடி அன்பாய்க்கொலுவிருந்தார்
பட்டத்தரசி பைங்கிளிசுபத்திரையும்
ஆயன்சகோதரியா ளாரணங்குவீற்றிருந்தாள்
நல்லதங்காள்வீரதங்காள் நல்லசங்கோதியம்மாள்
அந்தமுள்ளசுந்தரியா ளாரணங்குவீற்றிருந்தாள்
மலையனூர்தானகர்ந்த மாரிக்கொலுவிருந்தாள்
கைச்சூலங்கப்பரையுங் கையிற்கபாலமுடன்
பச்செலும்புதின்றால் பாலொழுகுமென்றுசொல்லி
சுட்டெலும்புதின்றவளே சுடலைவனங்காத்தவளே
அக்காளுந்தங்கையரும் ஐந்திரண்டேழுபேரும்
ஐந்திரண்டேழுபேரும் அங்கேகொலுவிருந்தார்

தங்காதுபேப்பில்லி தன்பேரைச்சொன்னவுடன்
அங்காளஈஸ்வரியும் அமர்ந்துகொலுவிருந்தாள்
தொல்லைவினை நீங்கச் சுகுணமதையளிக்கும்
எல்லைபிடாரியரும் இங்கேகொலுவிருந்தார்
காவலர்கள்தான்புகழக் கனகசிம்மாதனத்தில்
காவலதிகாரி கட்டழகிவீற்றிருந்தாள்
இந்தமனைமுதலா யேழுமனையுங்காவல்
சந்தமுன்காவல் சாதுகுண மாரியரே
காவல்பதனமம்மா கட்டழகிமாரியரே
காவலுக்குள்ளே களவுவரப்போகுதம்மா
பாராசவுக்கிட்டுப் பத்திரமாய்காருமம்மா
தீராவினைகளைத்தான் தீர்க்கும்பராபரியே
தாழும்பதிகளைத்தான் தற்காத்திரட்சியம்மா
ஏழுபிடாரியும் இசைந்துகொலுவிருந்தார்
முத்தாலுராவுத்தன் முனையிலுள்ளசேவகனும்
முற்றத்தில்வந்து முனைந்துகொலுவிருந்தார்
பூவாடைகெங்கையென்றுபூரித்துக்காத்திருக்கும்
பாவாடைராயனும் பக்கங்கொலுவிருந்தார்

தாட்சியில்லாதசிவ சங்கரியாளென்றுசொல்லும்
ஆட்சியுடன்கொலுவில் அமர்ந்துகொலுவிருந்தார்
தேவிதிருக்கொலுவில் சேர்ந்துகொலுவிருந்தார்
ஆயிதிருக்கொலுவில் அமர்ந்தாரனைவோரும்
மாரிக்கொலுவில் மனமகிழ்ச்சியாயிருந்தார்
வீரிக்கொலுவில் வீற்றிருந்தாரெல்லோரும்
ஆலித்துதானிருந்தார் அம்மைதிருக்கொலுவில்
பாலித்துதானிருந்தார் பராபரியாள்தன்கொலுவில்
கூடிக்கொலுவிருந்தார் கொம்பனையாள்தன்கொலுவில்
நாடிக்கொலுவிருந்தார் நாரணியாள்தன்கொலுவில்
சந்தோஷம்போக்கிச் சாயுச்சியமடைய
சந்தோஷமாகத் தாமிருந்தாரெல்லோரும்
நாடுதழைக்கவம்மா நல்லோர்மிகவாழி
மாடுதழைக்கவம்மா மானிலத்தோர்தான்வாழி
பாரிலுள்ள ஆடவரும் பாலகரும்மங்கையரும்
ஆரியருமற்றோரும் யாவர்களுந்தான்படிக்க
முன்னாளிற்மூத்தோர் மொழிந்ததாலாட்டை
இன்னாளிற்போற்ற எழுதாவெழுத்ததனால்

அச்சுக்கூடத்ததிபர் அநேகரிதுவரையில்
உச்சிதமாயச்சிலிதை யோங்கிபதிப்பித்தார்
கற்றோருமற்றோருங் களிப்பாய்படிப்பதற்கு
சொற்குற்றமில்லாமல் சுத்தப்பிரதியதாய்
பாரிலுள்ளோரிக்கதையைப் படித்துதொழுதேற்ற
கற்றவருமற்றவருங் களிப்படையவாழி
வாழிமிகவாழி வானவர்கள்தான்வாழி
சங்கரனுஞ்சங்கரியும் அறுமுகனும்தான்வாழி
செங்கண்மால்ஸ்ரீராமர் சீதையருந்தான்வாழி
பஞ்சவர்களைவரும் பைங்கிளியாள் துரோபதையும்
அல்லிசுபத்திரையும் அனைவோருந்தான்வாழி
முப்பத்துமுக்கோடி தேவர்களும்வாழி
சொற்பெரியசோமச் சூரியாக்கினிவாழி
நாற்பத்தெண்ணாயிரம் நன்முனிவர்தான்வாழி
கார்க்குங்க்ருடசித்தர் வித்தியாதரர்வாழி
சந்திரனுஞ்சூரியனுந் தானவர்கள்தான்வாழி
இந்திரனுந்தேவர்களும் எல்லோருந்தான்வாழி
கற்பகக்காவும் காமதேனும்வாழி

பற்பலதீவும் பஞ்சாக்ஷரம்வாழி
காத்தானொடுவீரன் கறுப்பன்மிகவாழி
சங்கிலிகருப்பன் சப்பாணிதான்வாழி
மானிடனிருளன் வடுகனுந்தான்வாழி
பாவாடைராயன் பலதேவரும்வாழி
இக்கதைகேட்டோர் என்னாளுந்தான்வாழி
பெருமையுடன்கேட்கும் பெரியோர்மிகவாழி
ஊரெங்கும்கீர்த்திபெற்ற உத்தமருந்தான்வாழி
பாருலகிலிக்கதையைப் படித்தோர்மிகவாழி
நாரணியாள்தன்கதையை நாள்தோறும்வாசிப்போர்
பாரினில்புத்திரபாக்கியம் படைத்துமிகவாழ்வாரே
மாரித்திருக்கதையை மகிழ்ந்துமேகேட்டோரும்
தேவிதிருக்கதையைத் தீர்க்கமாய்கேட்டோரும்
பாடிபடித்தோரும் பாக்கியத்தைத்தான்பெறுவர்
நாடித்துதிப்போரும் நற்கதியைத்தானடைவார்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திருப்பார்

மங்களம் மாரியம்மன் தாலாட்டு முற்றிற்று.

புஸ்தக விளம்பரம்

விக்கிரமாதித்தன் கதை திக்கு	2	0	0
மேற்படி தின்	1	4	0
தேசிங்குராஜன் கதை	0	8	0
நளச்சக்கரவர்த்தி கதை	0	8	0
மதனகாமராஜன் கதை	0	12	0
அல்லியரசாணி மாலை	0	8	0
அபிமன்னன் சுந்தரி மாலை	0	12	0
கிருஷ்ணன் தூது	0	8	0
மதுரைவீரன் கதை	0	8	0
ஏணியேற்றம்	0	6	0
தருமர் அஸ்வமேதயாகம்	1	0	0
கோவிலன் கதை	0	8	0
சித்திராபுத்திரன் கதை	0	8	0
துரோபதை குறம்	0	6	0
பஞ்சபாண்டவர் வனவாசம்	0	12	0
மயிலிராவணன் கதை	0	8	0
ஆரவல்லி கதை	0	6	0
பவளக்கொடி மாலை	0	8	0
நல்லதங்காள் கதை	0	6	0

ஆ. கன்னைய நாயுடு

28, ஷண்முகராயன் தெருவு, மதறாஸ்

[illegible]தன புத்தக விளம்பரம்.

பட்டணத்தார் புராண வசனம் படத்துடன்	0	4	0
பாப்புதாசன் லாவணி (முதல்பாகம்)	0	4	0
2-பாகம் சேர்ந்தது ஒரேகட்டடம்	0	8	0
கருப்பணப்பிள்ளை லாவணி ஒப்பாரி	0	2	0
பெரிய அம்மைநாதன் கீர்த்தனை	0	6	0
ஷை சதாமிர்தக் கீதம்	0	1	0
ஷை சமூக சீர்திருத்த கீதம்	0	1	0
துரைராஜன் (செந்தமிழ் கீர்த்தனை)	0	1	0
இரண்டு பாகம்	0	2	0
சன்மார்க்க போதனாமிர்தக் கீதம்	0	1	0

திருவொற்றியூர் சென்னை.